(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 1st Term Examination - 2024

FWC

**வணிகக் கல்வி - I**
**Business Studies - I**

**Three Hours** | **Gr. 12 (2025)** | **32 T I**

சுட்டெண் :................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I இற்காக | |
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

**அறிவுறுத்தல்கள்:**
- **எல்லா** வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- *16* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**01.** மனிதர்களால் கட்டாயமாக நிறைவேற்றப்படவேண்டிய உடல், உளரீதியான நிலைமையினை பூர்த்திசெய்யும் பல்வேறு முறைகள் அழைக்கப்படுவது,
(1) தேவைகள் (2) விருப்பங்கள் (3) பெறுமதிகள்
(4) கேள்வி (5) பொருட்கள் (……)

**02.** உற்பத்தியின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தும்போது சுரங்கமறுத்தலும் அகழ்வும் உள்ளடக்கப்படக்கூடியது,
(1) முதலாம் நிலையின் கீழ் (2) இரண்டாம் நிலையின் கீழ் (3) விவசாயத் துறையின் கீழ்
(4) கைத்தொழில் துறையின் கீழ் (5) சேவைகள் துறையின் கீழ் (……)

**03.** வணிகத்தின் உள்ளீட்டு வெளியீட்டு செய்முறையுடன் தொடர்புபடாத விடயங்களின் தொகுதி எது?
(1) பொருட்கள், சேவைகள், எண்ணங்கள், இடங்கள்
(2) நிர்வாகம், நிதி, சந்தைப்படுத்தல், உற்பத்தி
(3) வியாபாரம், வர்த்தகம், வணிகம், உற்பத்தி
(4) நிலம், உழைப்பு, மூலதனம், தகவல்
(5) அறிவு, தகவல், காலம், முயற்சி (……)

**04.** வணிகங்களை வகைப்படுத்துவதற்கான அடிப்படைகள் X நிரலிலும் வணிகங்களின் வகைகள் Y நிரலிலும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) நோக்கம் | A - முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை |
| (ii) உரிமை | B - சிறியளவு, நடுத்தரளவு, பாரியளவு |
| (iii) அளவு | C - தனியார், பொது |
| (iv) உற்பத்தித் துறை | D - விவசாயம், கைத்தொழில், சேவைகள் |
| (iv) உற்பத்தியின் தன்மை | E - இலாபம், சமூகநலன் |

வணிகங்களை வகைப்படுத்துவதற்கான அடிப்படைகளுக்கேற்ப வணிகங்களின் வகைகளை ஒழுங்கு முறையாகக் கொண்ட விடைத் தொகுதி எது?
(1) A, C, B, D, E (2) E, C, B, A, D (3) A, D, B, C, E
(4) E, A, B, D, C (5) E, C, B, D, A (……)

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**05.** பின்வருவன அக்கறையுடைய தரப்பினர்கள் அக்கறை காட்டுவதற்கான காரணங்களாகும்.

A – வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்துகொள்வதற்கு
B – சந்தைப் பங்கினை அறிந்துகொள்வதற்கு
C – முகாமைத்துவத் தீர்மானங்களின் வெற்றி தோல்வியினை அறிந்துகொள்வதற்கு
D – தொழிலில் பதவியுயர்வினைப் பெறுவதற்கு
E – வணிகத்தின் இலாபத்தினை உயர்த்துவதற்கு
F – வணிகத்தின் நீண்ட கால வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு
G – உயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

மேற்படி காரணங்களில் முகாமையாளர் ஒருவர் வணிகத்தில் அக்கறைகொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய சரியான விடை எது?

*(1)* A, C, E *(2)* A, B, E *(3)* B, D, E *(4)* E, F, G *(5)* D, E, F (……)

**06.** உலகில் பொதுவாகக் காணப்படும் சில பிரச்சனைகள் வருமாறு.

A – மூளைசாலிகள் வெளியேற்றம்
B – உயிரப் பல்வகைமை இழப்பு
C – காடழிப்பு
D – வேலைவாய்ப்பின்மை
E – வளி மாசடைதல்
F – மண் அரிப்பு
G – உடற்பருமன்
H – வருமான சமமின்மை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சமூக – பொருளாதார பிரச்சனைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

*(1)* A, D, G, H *(2)* B, C, E, G *(3)* B, C, F, H
*(4)* A, C, F, G *(5)* A, C, E, G (……)

**07.** பின்வருவனவற்றுள் பொருளாதாரச் சூழல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?

*(1)* விலை மட்டம், சேமிப்பு, சனத்தொகை, கல்வி மட்டம்
*(2)* பணவீக்கம், பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், வயது மட்டம்
*(3)* முதலீடு, வேலைவாய்ப்பு, இயற்கை அழிவுகள், சேமிப்பு
*(4)* விலை மட்டம், பணவீக்கம், சேமிப்பு, முதலீடு
*(5)* வட்டி வீதம், நாணயமாற்று வீதம், பாலின அமைப்பு, கல்வி மட்டம் (……)

**08.** பின்வருவனவற்றுள் மீள்உருவாக்கம் (Replace) என்பதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டினைத் தெரிவுசெய்க.

*(1)* சாப்பாடு பொதிசெய்யும் பொலித்தீன்களுக்குப் பதிலாக சாப்பாட்டுப் பெட்டியினைப் பயன்படுத்துதல்.
*(2)* மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன்வளர்ப்பை மேற்கொள்ளல்.
*(3)* சுத்தமான நீரினை பிளாஸ்டிக் பொதிகளில் இடாதிருத்தல்.
*(4)* வைக்கோலிலிருந்து கடதாசி உற்பத்திசெய்தல்.
*(5)* அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல். (……)

**09.** வணிகமொன்றுடன் தொடர்புபடும் பின்வரும் விடயங்களைக் கவனிக்க.

A – வணிகம்
B – நிதி நிறுவனங்கள்
C – ஊழியர்
D – வழங்குனர்
E – போட்டியாளர்
F – எதிர்கால முதலீட்டாளர்

வணிகமொன்று தனது ஒழுக்க விழுமிய முறைமையைக் கட்டியெழுப்பும்போது கவனம் செலுத்த வேண்டிய தரப்பினர்களைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A, C, E, F *(2)* B, D, F *(3)* A, B, D, F
*(4)* C, D, E *(5)* A, C, E (……)

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**10.** நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கருவின் அடிப்படையில் "ஏற்கக்கூடியது" என்ற நிலையினை வெளிப்படுத்தக்கூடியது எது?
(1) நிலைபேறான சூழல் பாதுகாப்பும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியும் இணைந்தது
(2) நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியும் நிலைபேறான சமூக அபிவிருத்தியும் இணைந்தது
(3) நிலைபேறான சூழல் பாதுகாப்பு மாத்திரம்
(4) நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி மாத்திரம்
(5) நிலைபேறான சூழல் பாதுகாப்பும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியும் இணைந்தது. (……)

**11.** பொருளாதார உறுதிப்பாட்டில் காணப்படக்கூடிய புற விலை மட்ட உறுதித்தன்மை கருதுவது,
(1) அந்நியச் செலாவணி வீதத்தை நிலையாகப் பேணல்
(2) உள்நாட்டு விலை மட்டத்தை நிலையாகப் பேணல்
(3) வட்டி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணல்
(4) அரசின் வரிக் கொள்கையை நிலையான மட்டத்தில் பேணல்
(5) பணவீக்கத்தை நிலையான மட்டத்தில் பேணல் (……)

**12.** அரசு மற்றும் வணிகங்களின் இலக்குகள் சில பின்வருமாறு.
A - வேலை - வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
B - கைத்தொழில்மயமாதலை மேம்படுத்துதல்
C - உற்பத்திப் பொருட்களை உருவாக்குதல்
D - வருமான மீள்பகிர்வு
E - நிறைதொழில் மட்டத்தினைப் பராமரித்தல்
F - விலைகளின் ஸ்திரத்தன்மை
G - ஊழியர் ஈடுபாட்டினை மேம்படுத்தல்
H - கூட்டுரு ஆளுகையை நடைமுறைப்படுத்துதல்
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அரச இலக்குகளை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?
(1) A, C, G, H (2) A, D, E, F (3) B, D, F, G (4) B, D, E, F (5) D, E, F, G (……)

**13.** தனியார் வணிகங்கள் மீது அரசு செல்வாக்கு செலுத்தும் முறைகளில் 'கொள்கைகளை உருவாக்கல்' எனும் அடிப்படையில் 'மத்திய அரசு' மட்டத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய முறையாக அமைவது,
(1) நிதிக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்
(2) வியாபாரச் சட்டங்களை நடைமுறைப்படுத்தல்
(3) சூழல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
(4) பாதுகாப்புச் சேவையை வழங்கலும் பெறலும்
(5) கட்டடம் அமைப்புத் திட்டங்களுக்கு அனுமதியளித்தல் (……)

**14.** பின்வருவனவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களும் நுகர்வோர் உரிமைகளும் பின்வருமாறு.
A - தொடர்ச்சியான பங்களிப்பு
B - அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்து கொள்ளல்
C - இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளல்
D - நுகர்வோர் கல்வியைப் பெறல்
E - சூழல் தொடர்பாக கவனம் செலுத்துதல்
F - தகவல்களை அறிந்து கொள்ளல்
G - ஒத்துழைப்பு
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களை மாத்திரம் கொண்டுள்ள விடை எது?
(1) A, B, G (2) D, E, G (3) A, E, G (4) B, D, G (5) D, E, F (……)

**15.** நுகர்வோரின் உயிர் ஆதனங்களுக்குத் தீங்கை ஏற்படுத்தக்கூடிய பொருட்களை விற்றல், சேவைகளை வழங்குதல் என்பனவற்றிலிருந்து நுகர்வோரை பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட அரச நிறுவனம் எது?
(1) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
(2) தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
(3) அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம்
(4) இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்
(5) மத்திய சுற்றாடல் அதிகார சபை (……)

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

- ***16 – 20 வரையான வினாக்களில் கீறிட்ட இடங்களை பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.***

**16.** (அ) இலாபத்தைப் பெறுவதற்காக வணிகங்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ள நிச்சயமற்ற தன்மை மற்றும் நட்டம் ஏற்படக்கூடிய நிலைமை என்பன ………………………… என அழைக்கப்படும். அதேவேளை, பொருட்கள் சேவைகளை உற்பத்திசெய்தல், அருமையான வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற கருமங்களில் இலாபத்தை நோக்காகக் கொண்டு வணிகங்கள் ஈடுபடுவதனால் இதனை ……………………………………….. என அழைப்பர்.

(ஆ) ஒருவர் தனக்கு தேவையானதை தானே உற்பத்திசெய்வது ……………..…………………….. எனப்படுவதோடு ……………………………….. விளைவொன்றாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.

**17.** (அ) உள்நாட்டு வியாபாரம் ………………………………. ஆகவும் ………………………………. ஆகவும் வகைப்படுத்தப்படும்.

(ஆ) வங்கி, காப்புறுதி, போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் போன்ற வணிகங்களுக்கு அவசியமான சேவைகள் …………………………………… எனப்படுவதோடு வரவட்டை, கடனட்டை, முற்பணக் கொடுப்பனவு அட்டை என்பன ……………………………….. ஆகும்.

**18.** (அ) வணிக நடவடிக்கைகளில் அகச் சூழல் காரணிகளின் நேரான தாக்கம் …………………………….. என அழைக்கப்படும் அதேவேளை அவற்றின் எதிரான தாக்கம் …………………………… என அழைக்கப்படும்.

(ஆ) வாடிக்கையாளர், ஊழியர்கள், ………………………………. மற்றும் ……………………………….. ஆகியோர் வணிகமொன்று சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றும்பொழுது கவனத்தில்கொள்ளப்பட வேண்டிய முக்கிய தரப்பினராவர்.

**19.** (அ) அரசின் வருமானம் ……………………………… ஆகவும் ……………………………….. ஆகவும் பிரதானமாக வகைப்படுத்தப்படும்.

(ஆ) பேரினப் பொருளாதார உறுதித்தன்மையினைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விலையினை உறுதியாக வைத்திருத்தல் என்பன அரசின் ………………………………… மற்றும் ……………………………………….. கொள்கைகளின் நோக்கங்களாகும்.

**20.** (அ) வணிக வங்கிகளும், முதல்நிலை வியாபாரிகளும் அவர்களின் மேலதிக நிதியினை மத்திய வங்கியிலுள்ள அரசின் பிணைப் பத்திரங்களில் முதலீடுசெய்யும்போது செலுத்தப்படுகின்ற வட்டி வீதம் …………………………………………….. ஆவதோடு வணிக வங்கிகள் திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் மத்திய வங்கி இறுதிக் கடன் வழங்குனராக வழங்கும் கடனுக்கு அறவிடுகின்ற வட்டி வீதம் …………………………………… ஆகும்.

(ஆ) சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வோர் உரிமைகளை முன்வைத்தோர் ………………………………….. மற்றும் ……………………………………… ஆகியோராவர்.

- ***21 – 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.***

**21.** நிகழ்காலத்தில் தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வணிகத் துறையில் ஏற்பட்ட புதிய போக்குகள் நான்கு தருக.

*(1)* ……………………………………………… (2) ……………………………………………………

*(3)* ……………………………………………… (4) ……………………………………………………

**22.** வணிகச் சூழலை ஆய்வுசெய்வதன் மூலம் வணிகரொருவர் பெறக்கூடிய பயன்களைக் குறிப்பிடுக.

*(1)* ……………………………………………… (2) ……………………………………………………

*(3)* ……………………………………………… (4) ……………………………………………………

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**23.** வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான செய்தித் தொகுப்புகள் சில கீழே தரப்படுகின்றன.

1. கடனுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் குறைக்கப்படுகின்றது.
2. உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான ஊக்குவிப்புக்களை அதிகரிக்க புதிய அரசு தீர்மானித்துள்ளது.
3. தற்போது இலங்கையில் முதியோர் சனத்தொகை அதிகரிக்கும் போக்கு காணப்படுகின்றது.
4. சார்க் (SAARC) வலய நாடுகள் ஒரே வகையான பண அலகொன்றை பயன்படுத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட செய்தித் தொகுப்புக்களின் மூலம் வெளிக்காட்டப்படும் சூழல் காரணிகளை கீழே தரப்படும் இடைவெளியில் குறிப்பிடுக.


1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………


**24.** நிலைபேறான தன்மைக்கான 4R எண்ணக்கருவின் கூறுகளைப் பெயரிடுக.

(1) ………………………………………………… (2) …………………………………………………

(3) ………………………………………………… (4) …………………………………………………

**25.** பின்வரும் உருவப் படங்களுக்குப் பொருத்தமான கருத்தினைக் குறிப்பிடுக.

(1)  …………………………………….

(2)  …………………………………….

(3)  …………………………………….

(4)  …………………………………….

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 1st Term Examination - 2024

FWC

**வணிகக் கல்வி - II**
**Business Studies - II**

**Gr. 12 (2025)** | **32** | **T** | **II**

❖ **வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

❖ ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

**பகுதி I**

**01.** சூழலியல் தொடர்பான பட்டக் கற்கைநெறி ஒன்றினைப் பூர்த்திசெய்த ராஜி என்பவர் தனது கிராமத்திலுள்ள பாக்குத் தோட்டங்களிலிருந்து பெறப்படும் பாக்கு மர ஓலையின் மட்டையினைப் பயன்படுத்தி உணவுத் தட்டுக்களை உற்பத்திசெய்யும் சிறிய தொழிற்சாலை ஒன்றினை அமைத்ததுடன் வணிக நடவடிக்கைகளுக்காக ஐந்து பயிற்சிபெற்ற ஊழியர்களை நியமித்ததுடன் தேவையான கருவிகள் உபகரணங்களையும் கொள்வனவு செய்தார். பிளாஸ்ரிக் தட்டுக்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் பாவனைக்கெதிரான பொது மக்கள் விழிப்புணர்வையும் சமூகத்தில் அவர் மேற்கொண்டார். இதனால் அவரது பொருட்களுக்கு சந்தையில் நல்ல கேள்வி ஏற்பட்டதுடன் தனது பொருட்கள் பற்றிய விளம்பரங்களை சமூக வலைத்தளங்களூடாகவும் மேற்கொண்டார்.

(i) (அ) மேற்படி வணிகம் நிறைவுசெய்யும் மனித தேவை யாது? *(01 புள்ளி)*

(ஆ) மேற்படி வணிகத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான வணிகக் கருமங்கள் இரண்டையும் தருக. *(01 புள்ளி)*

(ii) பின்வரும் உற்பத்திக் காரணிகளுக்கு மேற்படி சம்பவத்திலிருந்து ஒவ்வொரு உதாரணங்கள் குறிப்பிடுக.

(அ) நிலம் (ஆ) உழைப்பு

(இ) மூலதனம் (ஈ) முயற்சி *(02 புள்ளிகள்)*

(iii) (அ) மேற்படி வணிகத்தின் அகச் சூழல் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ஆ) மேற்படி வணிகத்தின் அக்கறையுடைய தரப்பினர்களைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(iv) மேற்படி வணிகத்தினால் மேற்கொள்ளக்கூடிய பின்வரும் வணிகத் தொழிற்பாடுகளுக்கு எடுத்துக் காட்டுக்களைத் தருக.

(அ) சந்தைப்படுத்தல் (ஆ) மனித வளம்

(இ) நிதிக் கருமங்கள் (ஈ) நிர்வாகம் *(02 புள்ளிகள்)*

(v) மேற்படி வணிகம் பொருளாதார வாழ்தன்மைக்கு எவ்வாறு பங்களிப்புசெய்ய முடியும் என விளக்குக. *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**02.** (i) சூரிய சக்தி மின்குமிழ்களை உற்பத்திசெய்யும் பவர்சேவர் பிறைவேற் லிமிட்டட் நிறுவனம் சிமாட் சப்ளையர்ஸ் இடமிருந்து தனக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்கிறது.

(அ) பவர்சேவர் பிறைவேற் லிமிட்டட் நிறுவனம் சிமாட் சப்ளையர்ஸ் நிறுவனத்தின் மீது அக்கறை கொள்வதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ஆ) சிமாட் சப்ளையர்ஸ் நிறுவனம் பவர்சேவர் பிறைவேற் லிமிட்டட் நிறுவனம் மீது அக்கறை கொள்வதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளரையும் போட்டியாளரையும் உதாரணம் மூலம் வேறுபடுத்திக் காட்டுக. *(02 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

(iii) கழிவுகளை உரியவாறு பாதுகாப்பாக வெளியேற்றுதல் என்பது வணிகங்களுக்கு தற்போதுள்ள பாரிய சவாலாகும். இதனை வணிகங்கள் எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என விபரிக்க.
*(02 புள்ளிகள்)*

(iv) உமது நண்பரொருவர் உணவகம் ஒன்றினை நடாத்துகிறார் எனவும் நுகர்வோர் பாதுகாப்பினை பின்பற்றுவதன் மூலம் தன்னால் உச்ச இலாபத்தினைப் பெற முடியாது என்ற கருத்தினை அவர் கொண்டுள்ளார் எனவும் கருதுக. நுகர்வோர் பாதுகாப்பினைப் பின்பற்றுவதனால் வணிகங்களுக்கு கிடைக்கும் நன்மைகளை எவ்வாறு அவருக்கு விளக்குவீர்? *(02 புள்ளிகள்)*

(v) நிலையான வைப்பு வசதி வீதத்தினையும் நிலையான கடன் வசதி வீதத்தினையும் தனித்தனியாக வரையறுக்க. *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***03.*** (i) 2022 மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறை, கைத்தொழில் துறை மற்றும் சேவைகள் துறை என்பனவற்றின் துறைரீதியான பங்களிப்பு வீதங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) (அ) 'பெறுமதி சேர்த்தல்' எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ஆ) உற்பத்திப் பொருளுக்கு பெறுமதி சேர்ப்பதன் மூலம் வணிகமொன்று பெறக்கூடிய அனுகூலங்கள் யாவை? *(01 புள்ளி)*

(iii) (அ) 'நிலைபேறான தன்மை' எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ஆ) வணிக ஒழுக்கக் கோவை எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(iv) (அ) பேருந்து நடாத்துனரொருவர் பின்பற்றவேண்டிய ஒழுக்க நெறிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
*(01 புள்ளி)*

(ஆ) புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி, பிரதான நாணயக் கொள்கைக் கருவிகள் **இரண்டினைத்** தருக. *(01 புள்ளி)*

(v) பாதணிகளை உற்பத்திசெய்யும் நிறுவனமொன்றின் உரிமையாளரான வினு என்பவர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துடன் இணைந்து டெங்கு ஒழிப்புக்கான விழிப்புணர்வு கருத்தரங்குளை பிரதேச மட்டத்தில் ஒழுங்குசெய்து நடாத்தியதுடன் அவற்றுக்கான நிதி அனுசரணையினையும் வழங்கினார்.

(அ) வினு மேற்கொண்ட இச்செயற்பாட்டிற்குப் பொருத்தமான எண்ணக்கருவினைப் பெயரிடுக.
*(01 புள்ளி)*

(ஆ) இவ்வாறான செயற்பாடுகள் மூலம் வினுவின் வணிகத்திற்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் யாவை? *(01 புள்ளி)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## பகுதி II

***04.*** (i) மனித விருப்பங்கள் வணிகங்களால் நிறைவேற்றப்படும் **நான்கு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.
*(02 புள்ளிகள்)*

(ii) (அ) பின்வரும் கூற்றுக்களில் இடையீட்டுத் தொடர்பினைக் கொண்டுள்ள பேரினச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

1. இரத்தினக்கல் அகழ்வு தொடர்பான வணிகங்கள் அரசாங்கத்திடம் அனுமதி பெறல் வேண்டும்.
2. புதிதாக ATM நிலையங்களை நிறுவும் வங்கிகள் இலங்கை மத்திய வங்கியிடம் அனுமதி பெறல் வேண்டும். *(01 புள்ளி)*

(ஆ) ஊழியர்கள் நிறுவனமொன்றின் வெற்றியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும் என விளக்குக. *(01 புள்ளி)*

(iii) மீள்சுழற்சி இடம்பெறக்கூடிய இரு முறைகளும் பின்வருமாறு.

(அ) குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருளொன்றை உயர் பெறுமானமுடைய உற்பத்தி பொருள் எனும் நிலைக்கு மாற்றுதல்.

(ஆ) உயர் பெறுமானம் கொண்ட உற்பத்தியினைக் குறைந்த பெறுமானம் கொண்ட மூலப்பொருள் என்ற நிலைக்கு மாற்றுதல்

மேற்படி இரு முறைகளையும் பெயரிட்டு பொருத்தமான உதாரணங்களைக் குறிப்பிடுக.
*(02 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

(iv) பின்வரும் அரசாங்கத்தின் செலவுகளை நடைமுறைச் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் என வகைப்படுத்திக் காட்டுக.

A - புதிதாக புகையிரத நிலையங்களை அமைத்தல்

B - வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகள்

C - மருந்து கொள்வனவுக்கான செலவுகள்

D - தேவையான வாகனங்களைக் இறக்குமதி செய்தல் *(02 புள்ளிகள்)*

(v) நுகர்வோர் ஒருவரால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் **நான்கு** தருக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***05.*** (i) பின்வரும் நடவடிக்கைகள் வணிக நடவடிக்கையொன்றா அல்லது இல்லையா என்பதைக் குறிப்பிடுக.

(அ) தனக்கு சொந்தமான காணித் துண்டொன்றை மோகன் என்பவர் தனது மகளுக்கு சீதன நன்கொடையாக வழங்கினார்.

(ஆ) தனது பாவனையிலுள்ள வாகனமொன்றை சுகுமார் என்பவர் பத்திரிகை விளம்பரம் ஒன்றின் மூலம் முகமட் என்பவருக்கு விற்பனைசெய்துள்ளார்.

(இ) பெண்களுக்கான ஆடைகளை தைத்து விற்பனை செய்யும் வணிகமொன்றை டிஷானி தனது வீட்டில் நடாத்துகிறார்.

(ஈ) தனது வீட்டுத்தோட்டத்தில் விளையும் மிளகாய்களை தினமும் ரவி என்பவர் சந்தையில் விற்பனைசெய்கிறார். *(02 புள்ளிகள்)*

(ii) பொருட்களிலிருந்து வேறுபடக்கூடியவாறு சேவைகள் கொண்டிருக்கக்கூடிய பண்புகள் யாவை? *(02 புள்ளிகள்)*

(iii) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை விளக்குக. *(02 புள்ளிகள்)*

(iv) (அ) வணிகங்களில் முதலீடுசெய்வதற்கு அரசாங்கம் தனியார் துறையினரை ஊக்குவிப்பதற்கான **இரண்டு** காரணங்கள் தருக. *(01 புள்ளி)*

(ஆ) அரசாங்கம் ஏன் வரியினை அறவிடுகிறது என விளக்குக. *(01 புள்ளி)*

(v) நுகர்வோர் அதிகார சபையின் நோக்கங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***06.*** (i) (அ) பின்வருவன வணிகங்களின் பரிணாம வளர்ச்சிக் கட்டங்கள் தொடர்பானவை ஆகும்.

A - சிறியளவு உற்பத்திகள் பாரியளவு உற்பத்திகளாக மாற்றம் பெற்றன.

B - இலத்திரனியல் ரீதியான தகவல் பரிமாற்றம் முக்கியத்துவம் பெற்றது.

C - பண்டங்கள் பரிமாற்றப்பட்டு தேவைகள் நிறைவுசெய்யப்பட்டன.

D - பரிமாற்ற நடவடிக்கைகளில் பொதுவான பரிமாற்றூடகங்கள் பயன்படுத்தப்பட்டன.

மேற்படி கூற்றுக்களை வணிகங்களின் பரிணாம வளர்ச்சிக் கட்டங்களுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்திக் காட்டுக. *(01 புள்ளி)*

(ஆ) இலத்திரனியல் வியாபாரம் எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ii) மனித தேவைகளும் விருப்பங்களும் வணிக நடவடிக்கைகள் மூலம் நிறைவுசெய்யப்படினும் அவற்றினால் பாதகமான விளைவுகளும் ஏற்படுகின்றன. விளக்குக. *(02 புள்ளிகள்)*

(iii) (அ) வெளிநாட்டு வியாபாரம் தொடர்பாக இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் தரக் கட்டுப்பாட்டு முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ஆ) நுகர்வோர் உரிமைகளை வணிகங்கள் பின்பற்றுவதன் அனுகூலங்கள் யாவை? *(01 புள்ளி)*

(iv) (அ) கழிவு வீதம் (Discounting rate) எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ஆ) வணிகங்களுக்கான கடன்களின் வட்டி வீதத்தை அதிகரிப்பதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் **இரண்டு** தருக. *(01 புள்ளி)*

(v) பின்வரும் அரச நிறுவனங்கள் அறிவிடும் வரிகளைக் குறிப்பிடுக.

(அ) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்: (ஆ) மது வரித் திணைக்களம்

(இ) மோட்டார் போக்குவரத்து திணைக்களம் (இ) மாகாண மற்றும் பிரதேச சபைகள்

*(02 புள்ளிகள்)*